**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**STC. No. 275/2022**

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 9–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 1 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமேழகர் | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **துரையய்யா** | **ஊர்** | | கூடநாணல் |
| வயது | : | 65/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**09.06.2026**

எதிரி ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி (06.11.2025 அன்று பகுதியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்)**

1) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகையை நான் எந்த வங்கியிலிருந்து எடுத்தேன் என்றால் லட்சுமி விலாஸ் வங்கியிலிருந்து 2 லட்சமும், சிட்டி யூனியன் வங்கியிலிருந்து 2 லட்சமும் எடுத்துக்கொடுத்தேன். அந்த வங்கி கணக்குகளின் பாஸ்புத்தகம் என்வசம் உள்ளது என்றால் வீட்டில் உள்ளது. எந்த தேதியில் மேற்படி வங்கி கணக்கிலிருந்து பணம் எடுத்தேன் என்றால் நான் பணம் கொடுத்த தேதியிலேயே எடுத்தேன். இந்த இரண்டு வங்கி கணக்கு பாஸ்புத்தகங்களை நான் வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய அறிவிப்பிலும் , புகாரிலும், வாக்குமூலத்திலும் இரண்டு வங்கிகளிலிருந்து பணம் எடுத்து கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2)நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனது வீட்டின் கையிருப்பு தொகையிலிருந்து எடுத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வகையில் பழக்கம் என்று புகாரிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வியாபாரம் செய்வதாக எனது புகாரில் நான் சொல்லியுள்ளது சரியா தவறா என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் வியாபாரம் சொன்னதாக எதிரி சொன்னார். எதிரி என்னிடம் மேற்படி சொன்னதாக புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வங்கியில் காசோலையை 02.07.2019ம் தேதி கலெக்சனுக்கு போட்டேன். காசோலையின் தேதி 22.06.2019. 22ம் தேதியிட்ட காசோலை எதற்காக 02.07.2019ம்தேதி வசூலுக்கு போடப்பட்டது என்ற காரணத்தை நான் புகாரிலோ, நோட்டிசிலோ

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு சொல்லாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் 12 ம் வகுப்பு ஆங்கில மீடியம் வரை படித்துள்ளேன்.

3) இந்த வழக்கில் காசோலையில் கையொப்பத்தின் மையும் , எழுதியுள்ள விபரங்களின் மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எழுதிக்கொடுத்தவருக்குதான் தெரியும். காசோலையின் விபரங்கள் யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் எதிரிதான் எழுதியிருப்பார், அவர் எழுதினாரா, ஆள் வைத்து எழுதினாரா என்று எனக்கு தெரியாது. காசோலையில் 1லட்சம் என்று எழுதப்பட்டு, 1 என்பது 4 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1லட்சம் என்பது என்னால் 4 லட்சம் என திருத்தம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) காசோலை அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான், டிராக் அசைண்ட்மெண்ட் காப்பிதான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும்போது பேங்க் ரிட்டன்மெமோ அசல் வைத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வருமானவரியை தொடர்ந்து கட்டுவதில்லை. எப்போதாவது செலுத்துவேன். 2019ஆம் ஆண்டில் வருமானவரி கட்டினேனா என்று ஞாபகத்தில் இல்லை. எனது இரண்டு வங்கி கணக்கிற்கான பணபரிவர்த்தனை விபரங்கள் அடங்கிய வங்கி கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

**( வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.